# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **CC No. 15/2024** |
| Deposition of witness for | Prosecution **PW - 1**<br>Deffence<br>Court |

Name : **திருமதி. புவனேஸ்வரி**
Husband's Name : திரு. ஜெயபிரகாஷ்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.02.2025.

**(எதிரி ஆஜர்.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை** :

1. நான் கூடலூர் வனதுர்க்கா கோயில் அருகில் வீட்டோடு வசித்து வருகிறேன். கடந்த 19.01.2024 அன்று மதியம் 02.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது வீட்டு கதவை தட்டும் சத்தம் கேட்டது. நான் வீட்டு கதவை திறந்தபோது அங்கு ஆஜர் எதிரி இருந்தார். (சாட்சி ஆஜர் எதிரியை சுட்டி காண்பித்து

அடையாளம் காட்டினார்). அப்போது ஆஜர் எதிரி அவரது கையால் எனது வாயை பொத்திக்கொண்டார். (சாட்சி சைகை மூலம் தனது வாயை கையால் பொத்தி காண்பித்தார்). எதிரி எனது வாயை பொத்திக்கொண்டு என்னை பார்த்து உன் பொன்னை எனக்கு கட்டிக் கொடுக்க மாட்டாயா என்று சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டி எனது இடது புற காதில் அடித்துவிட்டார். (சாட்சி இடது காதை தொட்டு காண்பிக்கிறார்).

2. நான் சத்தம் போடவும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்துவிட்டார்கள். எதிரி என்னை தள்ளிவிட்டார். அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். அதில் எனது இடது கை மணிகட்டிலும் இடுப்பிலும் அடிபட்டது. எதிரி அங்கிருந்து செல்லும் போது உன் பொன்னை கட்டிக் கொடுக்கவில்லை என்றால் உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டினார். ஆஜர் எதிரி வந்து சென்ற பின்பு எனது ஜெயின் காணவில்லை. எதிரி எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு இடுப்பில் வலி இருந்ததால் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் உதவியுடன் கூடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்த்தேன். நான் ஒரு நாள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. ஆஜர் எதிரி எனது கணவரின் அண்ணனின் மனைவியின் தம்பி என்று சொன்னால் சரிதான். எதிரியை குடும்ப உறவினர் என்பதன் பேரில் பல ஆண்டுகளாக தெரியும் என்றால் சரிதான். எதிரி எனது வீட்டிற்கு வந்ததாக சொல்வதற்கு அவர் எந்த வாகனத்தில் வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது நான் மட்டும் தான் வீட்டில் இருந்தேன் என்றும், எனது மூத்த மகள் ஆனந்தி அங்கு இல்லை என்றால் சரியல்ல, அவர் வீட்டில் குளித்து கொண்டிருந்தார். சம்பவத்திற்கு முன்பு எனது மகளிடம் செல்போன் இருந்ததா என்று சொன்னால் கிடையாது.

2. எனது மூத்த மகள் எதிரியை மூன்று ஆண்டுகளாக காதலித்து வந்ததால் குடும்பத்தில் பிரச்சனை இருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின்போது எனது மகள் எதிரியை பார்த்தாரா என்றால் அடிக்கும்போது பார்க்கவில்லை, நான் கத்தியபோது எதிரியை பார்த்தார். சம்பவத்திற்கு பின்பு எப்போது மருத்துவமனை சென்றேன் என்றால் மாலை சுமார் 04.00 மணி இருக்கும். நகை காணாமல் போனதாக சொல்வதற்கு அதை பற்றி எப்போது எனக்கு தெரியும் என்றால் நான் வீட்டில் இருந்து புறப்படும்போதே தெரியும். நான் போலீசாரிடம் என்ன நகை என்ன எடை என்று நகை பற்றிய விவரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், பொதுவாக நகை காணாமல் போனது என்றும சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் சொல்லி தான் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்களுக்கு கார்த்திக் வந்திருப்பது தெரியும் என்றும் அவர்கள் கார்த்திக்-யை பார்க்கவில்லை என்றும் சொன்னால் பார்த்திருப்பார்கள். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகளும் ஆஜர் எதிரியும் ஒருவருக்கு ஒருவர் விரும்புவதால் அது எனக்கு பிடிக்காததால் நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது மகள் சம்பவம் பற்றி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

Sd/- R. SASIN KUMAR, BISM., B.L.,
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**